0216416

32107

Reg. No.

**I Semester B.A/B.Sc./B.C.A./B.Sc.(FAD)/B.Com./B.B.A./B.H.M.**
**Degree Examination, August-2021**
**TAMIL LANGUAGE**
**(CBCS Scheme Freshers & Repeaters 2019-20 and Onwards)**
**Part - I Paper : I**

**Time : 3 Hours** **Maximum Marks : 70**

**I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(5×1=5)**

1. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" – என்று பாடியவர்,

   அ. சிற்பி ஆ. பாரதிதாசன்

   இ. நா.காமராசன் ஈ. பாரதியார்

2. "வாடாப் பயிர்" என்பதன் இலக்கணக் குறிப்பு

   அ. வினைத் தொகை ஆ. வினையெச்சம்

   இ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈ. பெயரெச்சம்

3. "கூறை" என்பதன் பொருள்

   அ. ஆடை ஆ. வீட்டின் மேற்பகுதி

   இ. கூடை ஈ. அணிகலன்

4. ஆசிய ஜோதி என்னும் நூலின் ஆசிரியர்

   அ. பாரதியார் ஆ. தேசிக விநாயகம் பிள்ளை

   இ. பாரதிதாசன் ஈ. அப்துல் ரகுமான்

5. அப்துல் ரகுமான் எழுதிய நூல்களுள் ஒன்று

   அ. எட்டுத்திக்கும் ஆ. பால்வீதி

   இ. குடும்ப விளக்கு ஈ. ஓர் இரவு

BMSCW LIBRARY

[P.T.O

II. **எவையேனும் நான்கிற்குச் சுருக்கமான விடை தருக.** **(4×5=20)**

1. புத்தக சாலை எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதை பாரதிதாசன் வழி நின்று விளக்குக.
2. நா. காமராசனின் 'வானவில்' என்ற கவிதையில் அமைந்துள்ள கற்பனை நயத்தைக் காட்சிப்படுத்துக.
3. புதுமைப் பெண்களின் பேச்சுக்களை பாரதியார் எவ்வாறு மகிழ்ந்து கூறுகிறார்?
4. வாழ்க்கைத் தத்துவங்கள் குறித்து கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கூறுவன யாவை?
5. கவிதை பிறக்கும் கற்பனைத் தளங்கள் குறித்து கவிஞர் சிற்பி கூறுவனவற்றைக் காட்சிப்படுத்துக.
6. குழந்தைத் தொழிலாளர்களின் அவல நிலையைத் 'தீக்குச்சிகள்' என்னும் கவிதையின் வழி புலப்படுத்துக.

BMSCW LIBRARY

III. **எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.** **(4×3=12)**

1. இன்ப உரைகள் தருபவர் ஆர்? – வீட்டை
   இன்னகை யாழ்ஒலி செய்பவர் ஆர்?
2. கானத்திலே அணுதாக நிறைந்த
   கவிதையிலே உயர்நாடு
3. பொய் விதைத்துப் பொய் அறுக்கும்
   கேலி வாழ்க்கை
4. உன் பாட்டன் குடித்தான் என்பதற்காக
   நஞ்சைக் குடிக்கிறாய்
5. நிதியின் பெருக்கம் – விளை
   நிலமுற்றும் உங்கள் வசம் பண்ணிவிட்டீர்!
6. முத்துக்களின் பள்ளம்
   கப்பலின் சமவெளி
   நதிகளின் கல்லறை

IV. **எவையேனும் நான்கிற்கு விடை தருக.** **(4×3=12)**

1. பயன்பாட்டுத் தமிழ் என்றால் என்ன?
2. கால மயக்கத்தைச் சான்றுடன் புலப்படுத்துக.
3. வல்லினம் மிகா இடங்கள் மூன்றினை எடுத்துக்காட்டுடன் கூறுக.
4. பின்வரும் சொற்களைத் அகர வரிசைப்படுத்து.

   கைத்தளம், கற்பூரம், கொத்தளம், காப்பகம், கோபுரம், கிண்ணம்
5. மணிப் பிரவாள நடை என்றால் என்ன?

   தமிழில் கலந்துள்ள வடசொற்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
6. மயங்கொலிப் பிழையினைச் சான்றுடன் விளக்குக.

V. **"நல்வாழ்வு" என்னும் நூலிலிருந்து பின்வரும் தலைப்புகளுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.**

BMSCW LIBRARY

1. பண்பாடு **(1×8=8)**

   **(அல்லது)**

   **வழிபாடு**
2. எளிமை ஓர் அறம் **(1×8=8)**

   **(அல்லது)**

   பொதுமை அறம்

VI. **மடல் வரைக.** **(5)**

நீங்கள் வசிக்கும் பகுதியில் நூல் நிலையம் இன்மையைக் குறிப்பிட்டு, நூல் நிலையம் அமைத்துத் தரக்கோரி மாநகராட்சி ஆணையருக்கு மடல் ஒன்று வரைக.

---

BMSCW LIBRARY